**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**<u>S.C. No. 40/2013</u>**

**<u>04.06.2026. அ.சா.16 திரு. நாகராஜன் த/பெ. சுப்பிரமணி</u>**

A1 to 3 present.

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி</u>**

என்னிடம் காண்பிக்கப்படும் அ.த.சா.ஆ.20 கைப்பற்றுதல் மகசரில் Column 6-ல் " அதில் ரத்தம் படிந்துள்ளது '' என்ற வார்த்தைகள் பின்னிட்டு வேறு மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3 மகசர்களிலும் செங்கல் மற்றும் கருங்கல் ஆகியவற்றின் எடை, அளவு, வடிவம் ஆகியவை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்குறிய வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்ட இடம் சம்மந்தமாக நான் வரைபடம் எதுவும் தயார் செய்யவில்லை. கைப்பற்றப்பட்ட செங்கல்கள் மற்றும் கருங்கல்லில் முத்திரையிட்டேனா என்றால் இல்லை. கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை நான் கைரேகை நிபுணரின் ஆய்வுக்கு அனுப்பவில்லை. கைப்பற்றுதல் மகசர் சாட்சியான சின்னய்யன் மற்றும் ராமகிருஷ்ணன் ஆகியோர் என்னிடம் கொடுத்த வாக்குமூலத்தில் ரத்தக்கரை படிந்த கற்கள் என்று சொல்லியுள்ளார்களா என்றால் சொல்லவில்லை.

சாட்சிகள் ரமேஷ் மற்றும் வெங்கடேசன் ஆகியோரது குவிமுச 164 (5) ன் கீழான வாக்குமூலம் காலதாமதத்துடன் 21 நாட்கள் கழித்து பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தலைமை நீதித்துறை நடுவரிடம் நான் மனு அளித்து பின்னர் அவர் உத்தரவு பெற்றபின் பதிவு செய்ததால் காலத்தாமதம் ஏற்பட்டது. நான் தாக்கல் செய்த இறுதி அறிக்கையில் எதிரி வீரன் (எ) வீராசாமியை முதல் எதிரியாகவும் எதிரி ராஜாமணியை 2ம் எதிரியாகவும் காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். அதன்பிறகு நான் திருத்தப்பட்ட இறுதி அறிக்கையை நான் தாக்கல் செய்தேன். சாட்சிகள் ரமேஷ் , தனலட்சுமி, வெங்கடேசன் ஆகியோர் தங்கள் வாக்குமூலங்களில் இறந்துபோன வெங்கடேசனை எதிரிகள் மூவரும் தாக்கியதாக உள்ளது என்றால் சரிதான். எதிரிகளிடம் இருந்து இறந்துபோன வெங்கடேசன் தப்பிக்க முயற்சி செய்யதாகவோ திருப்பி தாக்கியதாகவோ மேற்படி சாட்சிகள் என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சி ரமேஷ்

தனது தாயார் தனலட்சுமி சம்பவத்தை பார்த்ததாகவோ காயம்பட்ட வெங்கடேசனுடன் மருத்துவமனை சென்றதாக தனது புகாரிலோ வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. சாட்சி ரமேஷ் தனது வாக்குமூலத்தில் "எதிரி ராஜாமணி வெங்கடேசனை அடித்துக்கொண்டிருந்தார் நான் சென்று அடிக்கதீர்கள் என்று தடுத்தேன், அப்போது எதிரி வீராசாமி என்னை இழுத்து அடித்து கீழே தள்ளி விட்டார் " என்று சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. சாட்சி ரமேஷ் தனது வாக்குமூலத்தில்" எதிரி ராஜாமணி கல்லை எடுத்து வெங்கடேசனின் கழுத்தில் குத்தினார்" என்று சொல்லியுள்ளாரா என்றால் கழுத்தில் என்று சொல்லாமல் நெஞ்சுக்குழியில் குத்தினார் என்று சொல்லியுள்ளார். சாட்சி ரமேஷ் தனது வாக்குமூலத்தில் நான் தண்ணீர் கொடுத்தபோது வெங்கடேசன் வாந்தி எடுத்தார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சி ரமேஷ் தனது வாக்குமூலத்தில் தச்சம்பட்டு காவல் நிலையத்தில் போன் மூலமாக தகவல் கொடுத்ததாக சொல்லவில்லை. ஆனால் புகார் மனு கொடுத்துள்ளார்.

அ.சா.17 வெங்கடேசன் தனது வாக்குமூலத்தில் " எதிரிகள் இறந்த வெங்கடேசனை கட்டிப்போட்டு அடித்தார்கள். நான்போய் அவர்களை பிரித்து விட்டேன் " என்று சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை. அ.சா.17 வெங்கடேசன் தனது வாக்குமூலத்தில் போலிசாருக்கு தெரிவித்து விட்டு இறந்துபோன வெங்கடேசனை மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக சொல்லிவில்லை என்றால் போலிசாருக்கு தகவல் தெரிவித்ததாக சொல்லவில்லை. ஆனால் காட்டாம்பூண்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்து சென்றதாக சொல்லியுள்ளார். அ.சா.17 வெங்கடேசன் தனது வாக்குமூலத்தில் இறந்த வெங்கடேசன் வீட்டில் யாரும் இல்லை என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.17 வெங்கடேசன் தனது வாக்குமூலத்தில் இறந்த வெங்கடேசன் உடம்பில் ஆடையில்லாமல் இருந்ததாக சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை. அ.சா.17 வெங்கடேசன் தனது வாக்குமூலத்தில் "போலிசாருக்கு மதியம் 1.00 மணிக்கு தகவல் தெரிவித்தேன். போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். சம்பவம் என்னைத்தவிர யாருக்கும் தெரியாது'' என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.17 வெங்கடேசன் தனது வாக்குமூலத்தில் '' இறந்துபோன வெங்கடேசனை ராஜாமணி அலற அலற அடித்தார் என்றும் 10 நிமிடம் கழித்து உன்னை

பெட்ரோல் ஊற்றி கொளுத்தி விடுவேன் '' என்று என் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் விசாரித்த எந்த சாட்சியும் வெங்கடேசனின் ஆடையில் ரத்தம் படிந்தததாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கைப்பற்றிய வழக்கு சொத்துக்களில் உள்ள ரத்தமும், இறந்த வெங்கடேசனின் ரத்த வகையைதான் சார்ந்தது என்று மெய்பிக்க ரசாயன பரிசோதனைக்கு நான் அனுப்பவில்லை என்றால் சரிதான். 14.06.2018 ல் காலை 7.00 மணி முதல் மதியம் 2.30 மணி வரை என் விசாரணையை முடித்துவிட்டேன் என்றால் ஒரு பகுதியை முடித்தேன்.

நான்சொல்வதுபோல் எதிரிகள் என்னிடம் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும், ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றும், நான் சம்பவ இடத்திற்கு சென்று எந்த வழக்கு சொத்தும் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல. இறந்த வெங்கடேசக்கு ஒரு பெண்ணுடன் தகாத உறவு இருந்து என்றும் அதனால் வெங்கடேசனை கட்டயாப்படுத்தி அம்பிகா என்ற பெண்ணுடன் திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் என் விசாரணையில் அவ்வாறு தெரியவில்லை. திருமணம் ஆனது முதல் மன அழுத்தத்தில் இருந்த வெங்கடேசன் தூக்கு மாட்டி தற்கொலை செய்துகொண்டார் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வெங்கடேசனின் குடும்பத்திற்கும் ஏற்கனவே இருந்த முன்விரோதம் காரணமாக கொடுத்த தவறான புகாரை நான் சரியாக விசாரிக்காமல் எதிரிகள் மீது தவறான குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over to the witness and acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.